## பாடம் 3

ஜூலை 13-19

# ஓய்வுநாள்: விடுதலை நாள்



### ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *யாத் 16:16-18; 20:8-11; உபா 5:12-15; மத் 12:9-13; லேவி 25:1-7.*

**மனன வசனம்:** பின்பு அவர்களைநோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது என்றார். மாற்கு 2:27.

சிருஷ்டிப்பு நாளின் இறுதிச்செயலாக ஓய்வுநாளை தேவன் உண்டாக்கினார். தேவன் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தது மட்டுமல்ல, வாழ்க்கையின் ஒன்றுகலந்த ஓர் அம்சமாகவும் ஓய்வை ஏற்படுத்தினார். மனிதர்கள் தேவனோடும் பிற மனிதர்களோடும் பேசிமகிழ்வதற்காக உண்டாக்கப்பட்டதுதான் ஓய்வுநாள்.

அதனால்தான் தம் மக்களுக்கான திட்டத்தில் ஓய்வுநாளையும் கற்பனைகளில் ஒன்றாகக் கொடுத்தார்; இஸ்ரவேல் தேசத்தின் உருவாக்கத்தின்போதே ஓய்வுநாளும் சொல்லப்பட்டது. எபிரெயர்களின் வாழ்க்கையில் ஓய்வுநாள் ஒரு முக்கியப் பங்காற்ற வேண்டியிருந்தது.

ஓய்வுநாள் என்றவுடன், அன்று என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்பவை பற்றியே அதிகம் பேசுகிறோம். ஆனால், தேவகிருபையின் ஓர் அடையாளமாக ஓய்வுநாள் கொடுக்கப்பட்டதை மறக்கவே கூடாது. உலகத்திலும் தேவமக்களின் வாழ்விலும் முக்கியப் பங்காற்றுவதற்கு ஓய்வுநாள் கொடுக்கப்பட்டது.

எல்லா மனிதருக்காகவும் ஓய்வுநாள் சிருஷ்டிக்கப்பட்டதாக இயேசு சொன்னார். நாம் மெய்யாக 'ஓய்வுநாளைக் கைக்கொள்ள நினைக்கும்போது,' வாரத்தின் மற்ற அனைத்து நாட்களிலும் அது தாக்கத்தை உண்டாக்கும்; மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான ஒரு வழிவகையாகவும் அமையும். இயேசுவின் வாழ்வில் அதைப் பார்க்கிறோம்.

*2019, ஜூலை 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# மன்னா போதும்

இஸ்ரவேலர் பல தலைமுறைகளாக அடிமைத்தனத்திலும் சமுதாயச் சீர்கேட்டிலும் கழித்து, சிறுமைப்பட்டிருந்தனர். அவர்களை விடுவித்தபிறகு, அவர்களைத் தூக்கிநிறுத்தி, உயர்தரமான வாழ்க்கையைக்காட்ட விரும்பினார் தேவன்; ஒழுக்கமிக்க சமுதாயத்தை அமைப்பதற்கான சட்டங்களைக் கொடுத்தார். அதற்கான முதல்பாடமே அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்டதாக இருந்தது.

40 வருட வனாந்தர யாத்திரை முழுவதிலும் அவர்கள் கடைப்பிடித்த வாழ்க்கை மூலமாக ஒழுங்கும், தேவமுன்னேற்பாடுகளின் கண்கூடான ஆதாரமும், சுயநலமற்ற வாழ்க்கைக்கான ஏற்பாடுகளும், இஸ்ரவேல்கலாச்சாரத்தின் ஓர் அங்கமாக மாறியிருக்கவேண்டும். மன்னா கொடுக்கப்பட்டதில் அதைக் காணலாம். இஸ்ரவேலரின் பாளையத்தைச் சுற்றிலும், ஒவ்வொரு நாள் காலையிலும் தரையின்மேல் மன்னா பொழியப்பட்டது.

**கேள்வி: அவரவர் புசிக்கும் அளவுக்கு மட்டுமே மன்னாவைச் சேர்க்கமுடிந்தது என்று சொல்லப்படுவதிலுள்ள முக்கியத்துவம் என்ன? யாத் 16:16-18.**

கொடுக்கிற விஷயத்தில் கிறிஸ்தவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இந்தச் சம்பவத்தைத்தான் பவுல் உதாரணமாகக் காட்டுகிறார்: 'இப்பொழுது உங்களிடம் நிறைய உள்ளது. அவற்றைத் தேவையானவர்களுக்குக் கொடுங்கள். அவர்களிடம் மிகுதியாக இருக்கும்போது அவர்கள் உங்களுக்குத் தேவையானதைக் கொடுத்து உதவுவார்கள். இப்படியே எல்லாம் சமமாகும்.' 2கொரி 8:14. (பொது மொழிபெயர்ப்பு.)

தேவன் தம்முடைய மக்களுக்கும், தம்முடைய சிருஷ்டிப்புக்கும் போதுமானதைக் கொடுத்திருக்கிறார். தேவையானதைமட்டும் செலவழித்து விட்டு, மீதியானதை மற்றவர்களோடு பகிர ஆயத்தமாக இருந்தால், எல்லாருடைய தேவைகளையும் சந்திக்கமுடியும். நாளைய தேவைகளை தேவன் பார்த்துக்கொள்வார் என்கிற நம்பிக்கை இருந்தால்மட்டுமே, அன்றன்றைக்கானதை எடுக்கமுடியும். இஸ்ரவேலர்கள் போன்று சிறுமைப்பட்டவர்கள் தங்களுடைய பிழைப்பைமட்டுமே யோசிப்பார்கள்; ஆனால், நம்பிக்கையும் தயாளமும் பகிர்தலும் நிறைந்த ஒரு வாழ்க்கையை எடுத்துக்காட்ட தேவன் விரும்பினார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இரண்டுமடங்கு மன்னா பொழிந்தது. ஓய்வுநாளுக்கு ஆயத்தமாகும்படி அன்றுமட்டுமே அவர்கள் அதிகமாகச் சேகரிக்கமுடியும். தேவன் தங்களுடைய தேவைகளை எல்லாம் பார்த்துக்கொள்வார் என்று நம்புவதற்கு ஓய்வுநாளுக்கான ஏற்பாடும் ஓர் உதாரணமாக இருந்தது. தேவனுடைய அந்தக் கிருபையின் செயலானது, ஏழாம்நாள் ஓய்வுநாளில் தேவன் வாக்களித்திருந்த ஓய்வை அவர்கள் முழுவதுமாக அனுபவிக்க உதவியது.

ஓய்வுநாளில் தேவன் தருகிற ஓய்வை முழுவதுமாக அனுபவிக்க, வெள்ளிக்கிழமைகளில் நாம் என்ன செய்யலாம்?

# ஓய்வுநாள் கொடுக்கப்பட்டதற்கான இரண்டு காரணங்கள்

**கேள்வி: ஓய்வுநாள்பற்றிக் கூறுகிற இந்த இரண்டு வேதப்பகுதிகளும் எவ்வாறு ஒன்றையொன்று உறுதிப்படுத்துகின்றன? யாத் 20:8-11; உபா 5:12-15.**

நினைவுகூருதல் என்பது உறவின் முக்கியமான அம்சம். தேவன் நம்முடைய சிருஷ்டிகர், நம்முடைய மீட்பர் என்கிற உண்மையின் அடிப்படையில், நாம் அவரோடு அன்புறவுகொள்ளவேண்டுமென தேவன் விரும்புகிறார்; அவர் நம் மீட்பர், சிருஷ்டிகர் என்பதையே இந்த இரு வேதப்பகுதிகளிலுமுள்ள நான்காம் கற்பனை காட்டுகிறது. ஓய்வு நாளை நாம் ஆசரிப்பதற்கும் இவைதாம் முக்கியக் காரணங்களாகும்.

பொய்யான பல தெய்வங்களை வழிபட்ட நாடு எகிப்து. அங்கிருந்து வந்த இஸ்ரவேலருக்கு சிருஷ்டிகராகிய தேவனே மெய்யானவர் என்பதை நினைவுப்படுத்த வேண்டியிருந்தது. அதற்கான முக்கிய நினைவுச்சின்னமாக ஓய்வுநாள் இருந்தது. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையில் இரண்டுமடங்கு மன்னா கொடுக்கப்பட்டது, அவருடைய சிருஷ்டிப்பின் வல்லமைக்கு பலத்த ஆதாரமாக இருந்தது. தேவன் நம் சிருஷ்டிகர் என்பது நான்காம் கற்பனைபற்றிச் சொல்கிற யாத் 20இன் வேதப்பகுதியில் தெளிவாக உள்ளது.

ஆனால், இஸ்ரவேலரின் விடுதலை, மீட்பு, இரட்சிப்புகுறித்து உபாகமம் 5 சொல்கிறது. தேவன் தங்களை மீட்டதை இஸ்ரவேலர் சாட்சியாகச் சொல்லவேண்டியிருந்தது; ஒவ்வோர் ஓய்வுநாளிலும் நினைவுகூரவேண்டியிருந்தது. முதலாவது சரீரப்பிரகாரமாக எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டார்கள். பிறகு தேவனைப்பற்றியும் இரட்சிப்புபற்றியும் புரிந்துகொண்டார்கள். ஆவிக்குரிய இரட்சிப்பை வாராவாரம் நினைவுபடுத்தி, அவர்களை மகிழச்செய்கிற நாளாக ஓய்வுநாள் மாறியது.

ஓய்வுநாளின் நோக்கமே தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே உறவைச் சீர்ப்படுத்துவதுதான். 'நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்.' எசே 20:12. ஆனால் இது ஒரு குறிப்பிட்ட மக்களுக்கானதல்ல. இஸ்ரவேலர் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கவேண்டியிருந்தது; உலகத்தின் பிற மக்கள்மேல் அன்பைக் காட்டி, ஆசீர்வாதத்தை வழங்கவேண்டியிருந்தது.

'ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்.' உபா 5:15. நம்முடைய சிருஷ்டிப்பு, மீட்புகுறித்து நினைவுகூர்ந்து, மகிழும்படி ஓய்வுநாளை ஆசரிக்கும்போது, ஆண்டவரோடும் பிற மக்களோடும் நம் உறவு வளரும். தேவன் நம்மேல் கிருபையாயிருக்கிறார்; நாமும் கிருபையாயிருக்கவேண்டும்.

ஓய்வுநாளைக் கைக்கொள்வது எவ்வாறு பண்புள்ளவர்களாக, அன்புள்ளவர்களாக, அக்கறையுள்ளவர்களாக, மனதுருக்கமுள்ளவர்களாக நம்மை மாற்றமுடியும்?

## சமத்துவ நாள்

யாத்திராகமம் 20இலும் உபாகமம் 5இலும் நான்காம் கற்பனை பற்றித்தான் விவரமாகச் சொல்லப்படுகிறது. சில கற்பனைகளில் இரண்டுமூன்று வார்த்தைகள்தாம் உள்ளன. ஆனால், நான்காம் கற்பனைதாம் ஏன், எப்படி, யாருக்காக ஓய்வுநாளை நினைவுகூர வேண்டுமென விளக்கமாகச் சொல்கிறது.

**கேள்வி: வேலைக்காரர்கள், அந்நியர்கள், மிருகங்கள்பற்றிக்கூட யாத் 20:8-11இல் வருகிறது; காரணம் என்ன?**

---

ஓய்வுநாள் விவரத்தில் பிறமனிதர்களுக்கு முக்கியத்துவம் வருகிறது. உலகின் அனைத்துக் கலாச்சாரத்தினர் மத்தியிலும் இது போன்ற கட்டளை காணப்படுவதாக சிக்வே கே. டான்ஸ்டட் கூறுகிறார். ஓய்வுநாள் கற்பனையானது, 'மேல்மட்டத்தினரிலிருந்து ஆரம்பிக்காமல் அடிமட்டத்தினரை வலியுறுத்தி ஆரம்பிக்கிறது. சமுதாயத்தில் பெலவீனர்களாக உள்ளவர்ளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. அடிமைகளுக்கும் அந்நியருக்கும் பணிமிருகங்களுக்கும் ஓய்வு அதிகம் தேவைப்படும் என்பதால், அவ்வாறு வலியுறுத்துகிறது. அடிமட்டத்தினருக்கும், வாயில்லா ஜீவன்களுக்கும் ஏழாம்நாள் ஓய்வுநாள் அடைக்கலமாக இருக்கிறது'' என்கிறார்.

ஒவ்வொருவரும் அனுபவிக்கவேண்டிய நாள் ஓய்வுநாளென்று கற்பனை சொல்கிறது. ஓய்வுநாளின் அடிப்படையில் நாம் அனைவரும் சமம். வாரத்தின் மற்ற நாட்களில் பணியாளர்களை வேலைவாங்கலாம்; ஆனால், ஓய்வுநாளில் முடியாது. ஏனென்றால், அவர்களுக்கும் அதை ஓய்வுநாளாக தேவன் கொடுத்திருக்கிறார். மற்ற நாட்களில் ஒருவர் வேலைக்காரனாக அல்லது அடிமையாக இருக்கலாம்; ஆனால் மனிதர்கள் சமமாகச் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனால் மீட்கப்பட்டவர்கள் என்பதை ஓய்வுநாள் நினைவூட்டுகிறது; எனவே அவரும் தன் வழக்கமான வேலைகளை மறந்து, அந்நாளில் மகிழ்ந்திருக்க தேவன் அழைக்கிறார். ஓய்வுநாள் ஆசரிப்பவர்கள்போக, 'உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும்' ஓய்வுநாளின் பயனைப் பெறவேண்டும். யாத் 20:10.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்றிருந்த இஸ்ரவேலரின் மனநிலையில் இது உண்மையிலேயே தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். புதியதொரு தேசத்தில் தங்கவிருந்தார்கள்; எகிப்தியரின் ஒடுக்குமுறைகள் அவர்களிடம் காணப்படுவதை தேவன் விரும்பவில்லை. அவர்களுடைய சமுதாயத்திற்கான விலாவாரியான சட்டங்களைக் கொடுத்தார்; மேலும், எல்லாரும் தேவனுக்குமுன் சமம் என்பதற்கான வாராந்திர நினைவுச்சின்னமாக ஓய்வுநாளையும் கொடுத்தார்; அது நமக்கும் தேவையான நினைவுச்சின்னம்தான்.

உங்களுடைய ஓய்வுநாள் ஆசரிப்புமூலம் உங்களுடைய சமுதாயத்தில் உள்ளவர்கள் எவ்விதத்தில் பயனடையப் போகிறார்கள்?

# குணப்படுத்துகிற நாள்

பல விஷயங்களை உள்ளடக்கியதாக, பரந்தநோக்கமுடையதாக ஓய்வுநாள் ஆசரிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால், இயேசு இந்தப் பூமிக்கு வந்திருந்த சமயத்தில் அதன் நோக்கத்தையே மதத்தலைவர்கள் மாற்றியிருந்தார்கள். விடுதலையின், சமத்துவத்தின் நாளாக இருப்பதற்குப் பதிலாக மனிதபாரம்பரியங்களையும், கட்டுப்பாடுகளையும் உடைய நாளாக அதை மாற்றியிருந்தார்கள். அதை மற்றவர்கள்மேலும் திணித்தார்கள்; அத்தகைய நடவடிக்கைகளை இயேசு எதிர்த்தார்.

அதின் ஒரு பகுதியாக ஓய்வுநாளில் அநேகரை அவர் குணமாக்கினார். காரணத்தோடுதான் மற்ற நாட்களில் செய்யாமல் ஓய்வுநாளில் இயேசு அந்த அற்புதங்களைச் செய்தார். ஓய்வுநாளின் நோக்கத்தை விளக்குவதே அதன் நோக்கம். ஓய்வுநாளில் குணமாக்குவது சரிதான் என்று இயேசு சொன்னார். இயேசுவைக் கொல்லுவதற்கு பரிசேயர்கள் அதை ஒரு காரணமாகக் காட்டினார்கள்.

**கேள்வி: ஓய்வுநாளில் இயேசு குணமாக்கின பின்வரும் சம்பவங்களை வாசியுங்கள். மத் 12:9-13; மாற்கு 1:21-26; 3:1-6; யோவான் 9:1-16. இந்தச் சம்பவங்களில் வெளிப்படும் குறிப்பிடத்தக்க விஷயங்கள் என்ன?**

---

ஓய்வுநாளின் முக்கியத்துவத்தை இயேசு உறுதிப்படுத்தினார். அந்தக் குறிப்பிட்ட 24 மணி நேரம் வித்தியாசமானது. தேவனோடும், நம் குடும்பத்தினரோடும், நம் சபையினரோடும், நம் சமூகத்தினரோடும் உறவை வளர்ப்பதற்கான வாய்ப்பு அது. நம்முடைய சுயநலத்திற்காக ஓய்வுநாளை ஆசரிக்கக்கூடாது. 'ஓய்வுநாளிலே நன்மை செய்வது நியாயந்தான்' என்று இயேசு சொன்னார். மத் 12:12.

பிறர்மேல் அக்கறைகொண்டு ஏராளமான நன்மைகளைச் செய்யும் சபைஅங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு நன்மைசெய்வதில் இன்னும் முன்னேற்றம் தேவையென உணர்கிறவர்களும் உண்டு. ஒடுக்கப்பட்டோர் அல்லது புறக்கணிக்கப்பட்டோர்மேல் தேவன் அக்கறைகாட்டுகிறார்; நாமும் அக்கறைகாட்டவேண்டும். ஓய்வுநாளில் நாம் வழக்கமான வேலைகளைச் செய்யவேண்டியதில்லை; அன்று நமக்கு எவ்வித அழுத்தமும் கிடையாது. பிறர்மேல் அக்கறைகாட்டுவதற்கு அன்று அதிக நேரமுள்ளது; அதுதான் உண்மையோடும் ஊக்கத்தோடும் ஓய்வுநாளைக் கைக்கொள்வதாகும். 'நான்காம் கற்பனையின்படி, ஓய்வுக்கும் தொழுகைக்கும் அர்ப்பணிக்கப்பட்ட நாள் ஓய்வுநாள். அன்று உலகப்பிரகாரமான வேலையைச் செய்யாமல், தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டு கருணையும் இரக்கமுமான கிரியைகளைச் செய்ய வேண்டும் ... வேதனையைத் தணிப்பதும், துக்கத்தைப் போக்குவதும் அன்பின் சேவையாகும், இது தேவனுடைய நாளைப் பரிசுத்தப்படுத்துகிறது.' - *EGW, Welfare Ministry, p. 77.*

ஓய்வுநாளில் பிறருக்கு என்ன நன்மைகளைச் செய்கிறீர்கள்?

# தேசத்திற்கான ஓய்வு

இஸ்ரவேலரின் வாழ்க்கையோட்டத்தோடு பின்னிப்பிணைந்த ஓர் அம்சமாக ஓய்வுநாள் இருந்தது. ஓய்வுநாள் நியதி வார நியதி அல்ல. ஒவ்வொரு ஏழாம் வருடத்திலும் ஒரு விசேஷித்த ஓய்வை ஆசரிக்கவேண்டியிருந்தது. ஏழு ஏழு வருடங்களுக்குப்பிறகு, அதாவது ஒவ்வொரு ஐம்பதாவது வருடமான யீபிலி வருடமும் ஓய்வு வருடம்.

**கேள்வி: வேவி 25:1-7இல் கொடுக்கப்படும் கட்டளை என்ன? உங்கள் வாழ்க்கையிலும் வேலையிலும் இந்த நியதியை எவ்வாறு கடைப்பிடிக்கலாம்?**

ஓய்வு வருடத்தில் விவசாயம் செய்யக்கூடாது. இது நில மேலாண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு செயலாகும். இந்த விவசாய நடைமுறையின் பயன் இன்று அதிகமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஏழாவது வருடமானது அடிமைகளுக்கும் குறிப்பிடத்தக்க ஒரு வருடமாகும். இஸ்ரவேலரில் யாராவது கடன்பட்டு, தங்களை அடிமைகளாக விற்க நேர்ந்தால், ஏழாம் வருடத்தில் அவர்களை விடுதலை செய்துவிடவேண்டும். அதேபோல், ஏழாம் வருடத்தில் நிலுவையில் உள்ள கடன்களையும் ரத்துசெய்துவிடவேண்டும். உபா 15:1-11.

வனாந்தரத்தில் எவ்வாறு மன்னாவுக்கு தேவனை நம்பியிருந்தார்களோ, அது போலத்தான் ஓய்வுவருடத்திலும் விதைக்காமல் தேவனை நம்பியிருக்கவேண்டியிருந்தது. ஓய்வுவருடத்தில் நிலத்தில் விளைவதே போதுமென்றும் நம்பிக்கை அவசியமாயிருந்தது. அதுபோலத்தான், அடிமைகளை விடுதலை செய்வதும், கடன்களை ரத்துசெய்வதும். அது இரக்கத்தின் ஒரு செயல்; அதுபோல தேவவல்லமையிலும் நம்பிக்கை வைக்கிற ஒரு செயல்; தேவைகளை தேவன் சந்திப்பார் என்று நம்பியிருப்பதாகும். தங்களுடைய தேவைகளுக்காக மற்றவர்களை ஒடுக்க வேண்டியதில்லை என்று மக்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

ஓய்வுநாளின் ஒழுங்கும் நியதிகளும் இஸ்ரவேலரின் சமுதாயத்தில் முழுதாக்கத்தை உண்டாக்கவேண்டியிருந்தது. அதுபோலத்தான் இன்றும்; ஓய்வுநாள் ஆசரிப்பானது ஓர் ஆவிக்குரிய ஒழுங்கு; மற்ற அனைத்து நாட்களிலும் நாம் வாழ்கிற வாழ்க்கையில் அது மாற்றத்தை உண்டாக்கவேண்டும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுமாறு இயேசு சொன்னதைக் கடைப்பிடிக்கும் ஒரு வழிதான் ஓய்வுநாள். 'இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்.' மத் 6:32,33.

---

ஓய்வுநாள் ஆசரிப்பானது வாரத்தின் மற்ற ஆறுநாட்களிலும் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கவேண்டும்? மற்ற ஆறுநாட்களிலும் பேராசையோடும், சுயநலத்தோடும், அன்பில்லாமலும் வாழ்ந்து, ஓய்வுநாளில்மட்டும் புனிதராய்க் காட்டுவதில் என்ன பயன் இருக்கிறது? வாரத்தின் மற்ற நாட்களிலும் இந்தக் குறைகள் நம்மிடம் காணப்படாதிருந்தால், ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கலாம் அல்லவா?

# வெள்ளி ஜூலை 19

## மேலும் படிக்க:

‘துன்பத்தில் இருப்போருக்கு நிவாரணமளிப்பது ஓய்வுநாள்பிரமாணத்திற்கு இசைவானதென இயேசு அவர்களிடம் சொன்னார். அந்தப் பிரமாணத்தின்படியே தேவதூதர்களும் செய்கிறார்கள்; பாடுகளிலுள்ள மனிதர்களுக்கு ஊழியம்செய்யும்படி பரலோகத்திற்கும் பூமிக்கும் நடுவே எப்போதும் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கிறார்கள்.

‘இந்த நாளில் மனிதன் செய்யவேண்டிய ஒரு வேலையும் இருக்கிறது. வாழ்வின் அத்தியாவசிய தேவைகளைச் சந்திக்கவேண்டும். நோயாளிகளைக் கவனிக்கவேண்டும். எளியவருக்கு உதவவேண்டும். வேதனையில் இருக்கும் ஒருவருக்கு ஓய்வுநாளில் உதவமறுப்பவன் குற்றவாளியே. தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது. அன்று இரக்கத்தின் கிரியைகளைச் செய்வது அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதாகும். ஓய்வுநாளோ, வேறு எந்த நாளோ, அன்று நீக்கப்படக்கூடிய வேதனையை ஒரு மணிநேரம்கூட தம் சிருஷ்டிகள் அனுபவிப்பதை தேவன் விரும்புவதில்லை.’ — *EGW, DA, p 206,207.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *தேவனை நீங்கள் நம்புவதின் அடையாளமாக ஓய்வுநாளை ஆசரித்திருக்கிறீர்களா? அந்த நம்பிக்கையின் விளைவாக மன்னாவின் அனுபவத்தை தேவன் உங்களுக்குத் தந்திருக்கிறாரா? தந்திருந்தால், வகுப்பில் அதைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் கற்ற பாடத்தையும் சொல்லுங்கள்.*

2 *ஓய்வுநாளின் பல்வேறு அம்சங்களை நான்காம் கற்பனையில் தேவன் சொல்கிறார். யாத் 20:8-11; உபா 5:12-15. அதில் உங்களுக்கு மிகவும் அதிகமாகப் பிடித்த அம்சம் எது?*

3 *ஓய்வுநாளின் ஆசீர்வாதங்களை வகுப்பாக அல்லது தனியாக என்னென்ன வழிகளிலெல்லாம் உங்கள் பகுதியில் பகிர்ந்துகொள்ளலாம்?*

4 *ஓய்வுநாள் எவ்வாறெல்லாம் உங்கள் வாழ்க்கையை மாற்றுகிறது? ஓய்வுநாளின் நியதிகளும் ஒழுங்கும் உங்கள் வாழ்க்கையின் என்னென்ன அம்சங்களில் இன்னும் அதிக தாக்கத்தை உண்டாக்கவேண்டியிருக்கிறது?*

**பாடச்சுருக்கம்: சிருஷ்டிப்பு மற்றும் மீட்பின் நினைவுச்சின்னமாக ஓய்வுநாளை தேவன் கொடுத்தார். ஓய்வுநாளில் அதிகமான நடைமுறைப் பயன்களும் உள்ளன. தேவனுடைய ஏற்பாட்டில் நாம் நம்பிக்கையாக இருக்கவும், சமத்துவத்தைப் பேணவும் அது கற்றுத்தருகிறது. நம் உறவுகளை எல்லாம் மாற்றக்கூடிய ஆவிக்குரிய ஒழுங்காகவும் அது விளங்கமுடியும். ஓய்வுநாளில் வியாதியஸ்தர்களைக் குணமாக்கி, அதன் மெய் நோக்கத்தை இயேசு எடுத்துக்காட்டினார்; எளியவருக்கு ஓய்வுநாளில் உதவிசெய்வது சரியென்றும் காட்டினார்.**